

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | நவம்பர் 22 2018 | புரட்சி 17 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00


## ஜாதிவெறியே! இன்னும் எத்தனை உயிர் குடிப்பாய்?

# கொடூரக் கொலைக்கு நீதி கேட்டு பெரியார் சிலை அருகே ஆர்ப்பாட்டம்

நந்தீஷ்-சுவாதியின் கொடூரமான ஜாதிவெறி ஆணவப் படுகொலையைக் கண்டித்து கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் (நவம்.19, 2018) சென்னை அண்ணாசாலையில் உள்ள பெரியார் சிலை முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. தமிழ்த் தேச மக்கள் முன்னணி, திராவிடர் விடுதலைக்க கழகம், இளந்தமிழகம் ஒருங்கிணைத்த இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து செய்தியாளர்களுக்கு தரப்பட்ட அறிக்கை விவரம்:

கடந்த 16-11-2018 இல் நந்தீசு-சுவாதி என்ற காதல் இணையர் கொல்லப்பட்ட செய்தி ஊடகங்களில் வெளிவந்தது. சுவாதியின் தந்தை, சித்தப்பா உள்ளிட்ட மூவரின் ஒப்புதல் வாக்குமூலமும் இவர்களின் பின்னணியும் இது சாதி ஆணவப் படுகொலை என்பதை உறுதிசெய்துள்ளது. நந்தீசு தலித் சமூகப் பிரிவை சேர்ந்தவர். சுவாதி வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்.

கொலை நடந்த விதம், அதை மறைப்பதற்காக நந்தீசின் முகம் சிதைக்கப்பட்டதும் சுவாதியின் தலைக்கு மொட்டையடிக்கப்பட்டதும் கொலையின் தொழில்முறைத் தன்மையைப் புரிந்துகொள்ள போதுமானது. இதில் தொடர்புள்ள கூலிப்படை இன்னும் கைது செய்யப்படவில்லை. நந்தீசின் பெற்றோரை அச்சுறுத்தி மாண்டியாவிலேயே உடல்களை எரியூட்டிவிட்டது காவல்துறை. கொல்லப்பட்டது நந்தீசு, சுவாதி மட்டுமல்ல, சுவாதியின் வயிற்றில் வளர்ந்துக்கொண்டிருந்த மூன்று மாதக் குழந்தையும்! இதுவரை வெளியில் தெரிந்த சாதி ஆணவக் கொலைகளிலேயே மிகவும் கோரமானது இதுவாகும். 2012 இல் இளவரசன் திவ்யா இணையர் பிரிக்கப்பட்டு இளவரசன் கொல்லப்பட்டது தொடங்கி அரசியல் அரங்கில் முட்டுக் கொடுக்கப் படும் சாதி ஆணவப் படுகொலைகளின் தொடர் வரிசை நடந்து கொண்டிருக்கிறது. இது தமிழகமே வெட்கித் தலைகுனியும் அளவுக்கான காட்டு மிராண்டித்தனமாகும். அண்மையில் தெலங்கானா வில் அம்ருதாவின் இணையர் பிணராய் சாதி ஆணவத்தால் கொல்லப்பட்டதைக் கண்டோம்.

சாதி ஆணவக் கொலைகளைத் தடுத்து நிறுத்த தனிச்சட்டம் இயற்றுமாறு சனநாயக ஆற்றல்கள் வலியுறுத்தி வந்தபோதும் அதி.மு.க. தலைமையிலான தமிழக அரசு இதைப் புறக்கணித்து வருகிறது. மக்களின் சாதியுணர்வோடு முட்டிமோத விரும்பாத முக்கிய அரசியல் கட்சிகள் பட்டும்படாமல் இதைக் கண்டித்துவிட்டு கடந்துவிடுகின்றன. சாதியை வாக்கு வங்கிக்காக நம்பி இருக்கும் பிழைப்புவாத சாதிக் கட்சிகள் காதலையும் சாதி மறுப்பு திருமணங் களையும் கட்டுப்படுத்தும் நோக்கிலும் இதை மீறுபவர்களை கொல்லத் தூண்டும் நோக்கிலும் தலித் இளைஞர்கள் மீது அவதூறு பரப்பும் நோக்கிலும் பேசியும் செயல்பட்டும் வருகின்றனர். இதை இனியும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருப்பது நாகரிகத்திற்கு ஒவ்வாததாகும். சாதி அரசியல் கட்சிகளின் பின்புலம் இருப்பதால் இலகுவாக இதை முறியடித்துவிடவும் முடியாது. இடைவிடாத தொடர் இயக்கங்களின் வழியாகத்தான் சாதி ஆணவக் குற்றங்களுக்கு முடிவுகட்ட முடியும். இவ்வார்ப்பாட்டத்தின் வாயிலாகப் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்.

**கோரிக்கைகள்:**

- சுவாதி-நந்தீசு கொலை வழக்கை வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பதிய வேண்டும்
- நந்தீசு குடும்பத்திற்கு உரிய பாதுகாப்பும் இழப்பீடும் வழங்க வேண்டும்.




- கொலையில் தொடர்புடைய கூலிப் படையினர் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டும்.
- வழக்கை விரைந்து நடத்தி குற்றவாளிகளுக்கு கடும்தண்டனை வழங்க வேண்டும்.
- சாதி ஆணவக் குற்றங்களுக்கு எதிரான வெளிப்படையான கண்டனத்தை தமிழக அரசு தெரிவிக்க வேண்டும்.
- சாதி ஆணவக் குற்றங்களைத் தடுக்க தனிச் சட்டமியற்ற வேண்டும்.

கலப்பு மண இணையர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் தொடர்பாக வரும் புகார்களைப் பெறவும் விசாரிக்கவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.பி., மாவட்ட சமூக நல அதிகாரி, மாவட்ட ஆதி திராவிட நலத்துறை அதிகாரி ஆகியோர் அடங்கிய சிறப்புப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டுமென

(4 ஆம் பக்கம்)

## சாதியைக் கட்டியழுதால்... நாதியற்றுப் போவோம் நாம்!

### ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்ட முழக்கங்கள்

முடிவுகட்டுவோம்! முடிவுகட்டுவோம்!
சாதி ஆணவக் கொலைகளுக்கு
முடிவுகட்டுவோம் முடிவுகட்டுவோம்!

உரக்கச் சொல்வோம்! உரக்கச் சொல்வோம்!
எல்லோரும் நிகரென்று
உரக்கச் சொல்வோம்!

தமிழக அரசே! துணை போகாதே!
தமிழக அரசே! தமிழக அரசே!
சாதி ஆணவக் கொலைக்கு எதிராய்
தனிசட்டம் இயற்றிடு!

கைதுசெய் கைதுசெய்!
கொலை செய்த கூலிப்படையை
உடனடியாக கைதுசெய்!

அமைச்சர்களே, அமைச்சர்களே
ஊர்ப்பணத்தைக் கொள்ளையிட்டு
ஊர்வம்புப் பேசிக்கொண்டு
ஊர்வலம் போவதற்கா
அமைச்சர் பதவி உங்களுக்கு?

தமிழர்களே! தமிழர்களே!
சாதியைக் கட்டியழுதால்
நாதியற்று போவோம் நாம்!

பெற்றெடுத்த மகளையும்
மணம்முடித்த மருமகனையும்
மகள் வயிற்றுப் பிள்ளையையும்
கொல்லச் சொல்லும் சாதிவெறி!

சாதிவெறி போதையது!

தாயுணர்ச்சிக் கொன்றுவிடும்
தந்தையுணர்ச்சிக் கொன்றுவிடும்
மாந்தநேயம் கொன்றுவிடும்!

பழக்கமாம்! வழக்கமாம்!
வழக்கறிஞர் வேலையும்
மருத்துவப் படிப்பும்
எந்த சாதிப் பழக்கமய்யா!

பாட்டன் முப்பாட்டன்
பட்டப் படிப்பு படிச்சானா?
இடஒதுக்கீடு வாங்கிக்கிட்டு
அரசு வேலைக்குப் போனானா?

எல்லாமே மாறும்போது
மணமுறைதான் மாறாதா?

மந்திரிப்பதவி வாங்கிகிட்டு
யார்யாரோ சொத்துசேர்க்க
சாதிமயிரத் தூக்கிக்கிட்டு
தலைமேல சுமக்கணுமா?

மானம் போச்சு என்றுசொல்லி
மல்லுகட்டும் ஊர்க்காரன்
நீ பெத்த மகளுக்கு
சோறூட்டி வளர்த்தானா?

சாதிய ஆணவத்தால்
நிறையாது! நிறையாது!
உன்வயிறு நிறையாது!

சாதிய ஆணவத்தால்
உன் மனசு குளிராது!

தமிழர்களே தமிழர்களே!
சாதியைக் கட்டியழுதால்
நாதியற்றுப் போவோம் நாம்!

## பட்டியலிடுகிறார் கேரள முதல்வர்

# சடங்குகளுக்கு எதிராக கேரளாவில் நடந்த சமூக சீர்திருத்தங்கள்

*16.10.2018 அன்று திருவனந்தபுரத்தில் நடந்த இடது ஜனநாயக முன்னணி கொள்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் கேரள முதல்வர் பினராயி விஜயன் ஆற்றிய உரையிலிருந்து –*

ஸ்ரீ நாராயண குரு, அய்யன் காளி, சட்டம்பி சாமிகள் போன்றவர்களின் வரிசையில் உட்படுபவர்கள்தான் அய்யா வைகுண்டரும் பொய்கையில் குமார குரு தேவனும் எல்லாம். இவர்களால், இந்த மாநிலத்தில் நடைமுறையில் இருந்த மூடநம்பிக்கைகள் நீங்கியதால் வந்த ஒளி தான் இப்போது கேரளத்தில் வீசுகின்றது. நாம் அதில் பார்க்க வேண்டியது என்னவென்றால், அவர்கள் எல்லோரும் ‘சடங்குகளை மீறுவதற்காகத்தான் நிலைப்பாடு கொண்டிருந்தார்கள்’ என்பதைத் தான். ஸ்ரீ நாராயண குரு அருவிப்புறத்தில் சிவபிரதிஷ்டை நடத்திய சம்பவம்... உண்மையில் அது ஒரு சடங்கு மீறல் அல்லவா? அப்போது “உங்களுக்கு இதைச் செய்ய என்ன உரிமை?” என்று அவரிடம் கேட்டார்கள் அல்லவா? அதற்கு குரு என்ன பதில் கூறினார்...? “நாம் பிரதிஷ்டித்தது பிராமணர்களின் சிவனை அல்ல...நமது சிவனைத்தான் நாம் பிரதிஷ்டித்துள்ளோம்” அங்கு சடங்கு மீறல் தான் நடத்தப்பட்டது. அதன்பிறகு, அதே குரு. “இனி கோவில்களையல்ல...பள்ளிக்கூடங்களைக் கட்டுவது தான் மக்களுக்கான தேவை” என்று தானே சொன்னார்.

அங்கேயும் சடங்கு மீறல்கள் தானே தென்படுகிறது? அப்படியென்றால், சடங்குகள் மீறப்பட வேண்டியது என்று தான் நமது முன்னோர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதை நாம் நினைவில் இருத்த வேண்டும்.அய்யன்காளியின் வில்வண்டிப் போராட்டத்தைப் பாருங்கள்... பொட்டு வைத்து, பட்டுத் தலைப்பாகை வைத்து, கோட்டு அணிந்து.... அன்று அதற்கெல்லாம் உரிமை இருந்ததா? பொட்டு வைக்க உரிமை இருந்ததா? பட்டுத் தலைப்பாகை வைக்க உரிமை இருந்ததா? கோட்டு அணிய உரிமை இருந்ததா? அப்படியென்றால், உரிமையில்லை என்று சொன்னவர்களின் சட்டத்தோடு சேர்ந்து நிற்காமல், ‘எங்களுக்கு உரிமை உண்டு’ என்று கூறி, அந்தஉரிமையை நிலைநாட்டுவதற்காகத் தான் நின்றார்கள்.கடந்த வருடம் என்று தான் நினைக்கிறேன்... இங்குள்ள ஊரூட்டம்பலம் ஆரம்பப்பள்ளிக்குச் சென்ற போது, அங்கே பாதி எரிந்துபோன பெஞ்சை நான் பார்க்க நேர்ந்தது. அது... எந்த பெஞ்சு தெரியுமா? பஞ்சமி என்ற தாழ்த்தப்பட்ட சமூகச் சிறுமியைப் பள்ளியில் அமர விடவில்லை என்று கேள்விப்பட்ட போது, அந்த சிறுமியையும் அழைத்துக்கொண்டு, அய்யன்காளி தட்டிக் கேட்க வருகிறார் என்று கேள்விப்பட்ட மேல்ஜாதியினர் அந்த பள்ளிக்கே தீ வைத்தார்கள். அதில் முற்றும் எரிந்து போன பள்ளியிலிருந்து, எஞ்சிய இந்த எரிந்த, துண்டு பெஞ்சு மட்டும் கிடைத்தது. அதைத்தான் நான் அங்கு காண நேர்ந்தது. அவ்வாறு நமது மாநிலத்தில் வெவ்வேறு போராட்டங்கள் நடந்துள்ளன.

அப்படித்தான், நாம் இன்று காணும் கேரளம் உருவானது. அடையாளத்திற்காக மேல்ஜாதியினரால் அணிய வைக்கப்பட்ட கல் மாலையை அறுத்தெறிய நடத்தப்பட்ட போராட்டம்... உடன் அமர்ந்து படிக்க நடத்தப்பட்ட போராட்டம்... படித்த பிறகு... வேலை கிடைப்பதற்கான போராட்டம்... பாதையில் நடப்பதற்கான உரிமை கேட்டு நடத்தப்பட்ட போராட்டம்... கோவிலுக்குள் நுழைந்து வழிபடுவதற்கான போராட்டம்... இத்தகைய வெவ்வேறு போராட்டங்கள் மூலம் தான், நாம் இன்று காணும் கேரளம் உருவானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.இங்கே பாரதிய ஜனதா கட்சி நாட்டையாளும் கட்சியல்லவா? அக்கட்சியின் நிலைப்பாட்டை தனியாக நாம் பரிசீலிக்கவேண்டும்.

மகாராஷ்டிராவில் சனி தேவனின் ஒரு திருத்தலம் உள்ளது. ஒரு கோவில். அங்கு சனிதேவன் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். சனி சிக்னாபூர் என்பதுதான் அந்தக் கோவிலின் பெயர். அந்தக் கோவிலில் எக்காலத்திலும் பெண்கள் நுழைந்த தில்லை. பெண்கள் அக்கோவிலுக்குள் செல்லவே கூடாதாம். சனிதேவன் பெண்களைப் பார்க்கவே கூடாது என்பது தான் அங்குள்ள நிலைமை. இந்நிலையில் மும்பை உயர்நீதிமன்றம் ‘பெண்களுக்கு கோவிலுக்குள் செல்ல உரிமை உண்டு’ என்று தீர்ப்பளித்தது. அங்கே பாஜக அரசுதான் உள்ளது. அவர்கள் அந்தத் தீர்ப்பை அமல்படுத்தி னார்கள்.இப்போது பெண்கள் அந்தக் கோவிலுக்குச் செல்கிறார்கள். அப்படியென்றால், பாஜக ஆளும் மாநிலத்தில் நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்தலாம். பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலத்தில், இடது ஜனநாயக முன்னணி ஆளும் மாநிலத்தில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பே வந்தாலும் அமல்படுத்தக் கூடாது என்று எதிர்ப்புப் போராட்டம் நடத்துகிறார்கள். இது என்ன மாதிரியான இரட்டை நிலைப்பாடு? அங்கே அதுபோலவே உச்சநீதிமன்றத்தின் இன்னொரு தீர்ப்பு... மும்பைக்கு அருகே ஹாஜி அலி தர்கா... அங்கே பெண்களை செல்ல அனுமதிக்க வேண்டுமென்று மனு கொடுக்கப்பட்டதன் அடிப்படையில், நீதிமன்றம் பெண்கள் அந்த மசூதியில் செல்ல அனுமதித்தது. அந்த மசூதியில் பெண்கள் செல்கிறார்கள். இதெல்லாம் மகாராஷ்டிராவில் நடந்த விஷயங்களாகும். அதோடு இடதுமுன்னணி அரசு சமூக சீர்திருத்த பாரம்பரியத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளைத் தான் மேற்கொண்டு வருகிறது.

## பினராயி விஜயன் (கேரள முதல்வர்)



> சடங்குகள் மீறப்பட வேண்டியது என்று தான் நமது முன்னோர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

நமது கோவில்களில் “பிராமணர்கள்” அல்லாதவர்களும் பூசாரிகள் ஆகலாம். அது, நமது தேசமே பெரும் ஆதரவளித்து வரவேற்ற ஒன்றாகும். சாதாரணமாக எல்லோரும் பூசாரிகள் ஆகிவிட முடியாது என்பது போன்ற, மேல்ஜாதி ஆதிக்கம் நிறைந்த விதிமுறைகளை எழுதியவர்கள் உட்பட எல்லோரும், “எல்லா ஆகமங்களையும் கற்றுத் தேர்ந்தால் பூசாரி ஆவதற்கு தடையேது மில்லை” என்ற நிலைப்பாட்டை முன்வைத்தபோது ஏற்றுக் கொண்டார்கள். அதுபோலவே தான், அறநிலையத் துறை ஊழியர்களின் நியமனத்தில் பட்டியலினத்தவர்கள், மலைவாழ் இனத்தவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு சதவீதத்தை உயர்த்தினோம். உயர்வகுப்பின ரில் பொருளாதார ரீதியாக பின்னடைந்துள்ளவர்களுக்கு, அறநிலையத் துறை ஊழியர் நியமனத்தில் தனியாக இடஒதுக்கீடு செய்யும் ஒரு முறையையும் மாநில அரசு அமல்படுத்தியது. இதெல்லாம், சமூக சீர்திருத்த மரபின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும். இங்கே காங்கிரசார் எண்ணிப் பார்க்க வேண்டிய விஷயம் என்ன வென்றால், கட்சிக் கொடியின்றி பாஜக தலைமை தாங்கும் போராட்டத்தில் பங்கேற்றால், நீங்கள் காங்கிரஸ் அல்ல என்று ஆகிவிடுவீர்களா..? ஆமாம்...காங்கிரஸ் இல்லையென்று ஆகிவிடும் நிலை உங்களுக்கு நிச்சயம் ஏற்படும். நாளை அவர்கள் பாஜக ஆகிவிடுவார்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள். காங்கிரசுடன் இணைந்து நிற்பவர்கள் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. அது அரசியலமைப்புச் சட்டம் பற்றிய ஆர்.எஸ்.எஸ்-ன் பார்வை ஆகும். அரசியலமைப்புச் சட்டத்தைத் தகர்க்க வேண்டுமென்றுதான் ஆர்.எஸ்.எஸ் நினைக்கிறது. அதை அவர்கள் வெளிப் படையாகவே கூறுகிறார்கள். இந்திய நாடாளுமன்றத்திலேயே கூறிவிட்டார்கள். ஆனால் இப்போது ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. அந்த வாதத்தை காங்கிரசாரும் உயர்த்திப்பிடிக்கிறார்கள். அது, “எல்லாவற்றையும் விட உயர்ந்தது நம்பிக்கையே ஆகும். நம்பிக்கையே முக்கியம். அரசியலமைப்புச்சட்டத்தின் மதிப்புமிக்க அம்சங்களை விட சட்டங்களைவிட நம்பிக்கையே முக்கியம்” என்பதாகும்.இந்த வாதத்துடன் இணைந்து நிற்பவர்கள் அதன் பின்னால் மறைந்திருக்கும் ஆபத்தை சரியான விதத்தில் புரிந்து கொண்டிருக்கிறார்களா? இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த வாதத்துடன் அணி திரள்வதாக செய்திகள் வருகின்றன. முஸ்லீம் லீக் தலைவர்களும் உணர்ச்சி வசப்பட்டு இந்த வாதத்துடன் அணிவகுக்கிறார்கள். நீங்கள் இந்த வாதத்தை கொஞ்சம் விரிவுபடுத்திப் பாருங்கள்.


பாபர் மசூதி விவகாரத்தில்...எங்கே போய் முடியும்? நம்பிக்கைதான் முக்கியம் எனில், இராமர் கோவில்தான் அது என்று கூறும் நம்பிக்கையோடு அல்லவா இணைந்து நின்றிருக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ்-ம் அந்த வாதத்தோடு தான்... பாஜகவும் அந்த வாதத்தோடு தான்... காங்கிரசும் மிகச்சரியாக அந்த வாதத்தோடு தான், அக்காலத்தில் நின்றார்கள் என்று எல்லோருக்கும் தெரியும்... இந்த வாதத்தின் பின்னால் உள்ள ஆபத்து என்னவென்று சரியான முறையில் யார் புரிந்து கொண்டிருக்கிறார்கள்? நமது நாட்டில், சங் பரிவாரங்கள் உரிமை கொண்டாடுவது ஒரு பாபர் மசூதியின்மீது மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள ஏராளமான வழிபாட்டுத்தலங்கள் மீது அவர்களின் உரிமைவாதம் இருக்கிறது. இது எங்களது ஆராதனாலயம் என்று கூறுகின்ற உரிமை வாதத்தை முன்வைக்கிறார்கள்.எல்லாமே நம்பிக்கையின் அடிப்படையிலானது என்றால் நாளைய எதிர்காலம் என்னவாகும் என்று... நிதானமாக சிந்தித்தால் போதும்...சிந்திக்க முடிந்தால்...இவ்வாறு நம்பிக்கையின்பால் அடித்துச் செல்லப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதை மட்டும் நாங்கள் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்... நாம் கவனமாகப் பார்க்க வேண்டிய விஷயம் என்ன வெனில், எது அவர்களின் குறிக்கோள் என்பதே.. அரசைத் திட்டுவதோ... இடதுஜனநாயக முன்னணியைத் திட்டுவதோ அல்ல... மாறாக அவர்களின் உண்மையான நோக்கம் கேரளத்தின் மதசார்பற்ற சிந்தனையைத் தகர்ப்பதே ஆகும்.

அதை அனுமதிக்க வேண்டுமா? என்பதே நமக்கு முன் உள்ள கேள்வி. அதை அனுமதிக்கவே முடியாது. நாம் உறுதியாக இத்தகைய முன்னெடுப்புகளை எதிர்த்து நின்று போராடியிருக்கிறோம். மதசார்பற்ற சிந்தனைகளை எதிர்க்கவும், மதசார்பற்ற எண்ணங்களை தகர்க்கவும் நடத்தப்படும் முயற்சிகளை, நாம் எல்லோரும் இணைந்து முறியடிக்க வேண்டும். மதநம்பிக்கையாளர்கள் உட்பட உள்ள அனைவரும், அதற்காக அணிதிரண்டு களத்திலிறங்கிப் போராட வேண்டுமென்று இந் நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வாழ்த்துக்கள்...!

நன்றி : தீக்கதிர்

### 7 தமிழர் விடுதலை: மிதிவண்டிப் பயணம் வந்த தோழர்களுக்கு எழுச்சி வரவேற்பு

ஏழு தமிழர் விடுதலையை வலியுறுத்தி, சிவகங்கையிலிருந்து தமிழர் வாழ்வுரிமைக் கட்சியைச் சார்ந்த 7 இளைஞர்கள் மிதிவண்டியிலேயே சென்னை ஆளுநர் மாளிகை நோக்கி வந்தனர். ஆளுநர் மாளிகை எதிரே அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழக வாழ்வுரிமை கட்சி திராவிடர் விடுதலைக் கழகம், விடுதலை சிறுத்தைகள், எஸ்.டி.பி.அய்., தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், இளந்தமிழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் பங்கேற்று, ஏழு தமிழர் விடுதலையை வலியுறுத்தி ஆளுநர் மாளிகை முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வேல்முருகன், தொல். திருமாவளவன் ஆகியோர் சிறிது நேரம் உரையாற்றினர். கழக சார்பில் விடுதலை இராசேந்திரன், தபசி குமரன், இரா உமாபதி உள்ளிட்ட மாவட்டக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.



## குழப்பவாதிகளுக்கு கொளத்தூர் மணி விளக்கம் (7)

# தமிழ்நாடு பெயர் மாற்றம்: சங்கரலிங்கனாருக்கு முன்பே பெரியார் குரல் கொடுத்தார்

*“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

அம்பேத்கரின் 15ஆவது தொகுதியில், 95ஆவது பக்கத்தில் உள்ள ஒரு செய்தியை இங்கே குறிப்பிடுகிறேன்.”தமிழ்மொழி முதலில் தமிதா என்று உச்சரிக்கப்பட்டது.பின்னர் தமிழாகி, திராவிட என்று உரு திரிந்தது. தமிழ் அல்லது திராவிடம் என்பதுதான் ஆரியர்கள் வருவதற்கு முன்னால் இந்தியா முழுவதும் பேசப்படுகிற மொழியாக இருந்தது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பேசப்பட்டு வந்தது தமிழ் ஆகும். வட இந்தியாவிலிருந்த நாகர்கள் தங்களது தாய் மொழியான தமிழை கைவிட்டுவிட்டு சமஸ் கிருதத்தை கற்றுக்கொண்டனர். ஆனால் தென்னிந்தியாவில் இருந்த நாகர்கள் அவ்வாறு செய்யவில்லை. தமிழையே தங்களது தாய்மொழியாகப் பேணிக் காத்து வந்தனர். இந்த வேறுபாட்டை மனதில் கொண்டால் திராவிட என்ற பெயரை ஏன் தென்னிந்திய மக்களுக்கு மட்டும் பயன்படுத்தும்படி நேர்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். திராவிடர்கள் என்பதும், நாகர்கள் என்பதும் தாசர்கள் என்பதும் ஒன்றுதான்” என்று கூறுகிறார் அம்பேத்கர்.

ஆனால் ஏதோ பெரியாரும், பெரியார் இயக்கமும்தான் திராவிடர் என்ற சொல்லை கொண்டுவந்தது என்பதுபோல சொல்லுகிறார்கள். இங்கிருக்கிற தெலுங்கர்களுக்கு ஆதிக்கம் கொடுப்பதற்காக திராவிடர் என்ற சொல்லை கொண்டு வந்தார்கள் என்பதுபோல சொல்லுகிறார்கள். பெரியாரைத் தெலுங்கர் என்று சிலரும், கன்னடர் என்று சிலரும் சொல்கின்றனர். ஆனால் இவர்கள் இதையெல்லாம் எப்படி கண்டு பிடித்தார்கள் என்றால் எதையுமே இவர்கள் கண்டு பிடிக்கவில்லை என்பதுதான் பதில். அவரேதான் எழுதியிருக்கிறார்.

1926ஆம் ஆண்டில் ‘விதவா விவாக விளக்கம்’ என்ற புத்தகம் ஒன்று வந்தது. அந்த புத்தகத்திற்கு பெரியார் குடிஅரசில் மதிப்புரை எழுதினார். அதில் 5 வயதுக்குட்பட்ட விதவைகள் எத்தனை பேர் இருக்கிறார்கள், 1 வயதுக்குட்பட்ட விதவைகள் எத்தனை பேர் இருக்கிறார்கள்,10 வயதுக்குட்பட்ட விதவைகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை மக்கள் தொகை கணக்கீட்டிலிருந்து புள்ளி விவரங்களை எடுத்து விதவை மறுமணத்தைப் பற்றி பெரியார் எழுதினார்.

மாடு தினவெடுத்தால் தேய்த்துக் கொள்வதற்கு சொறிக்கல் நடுவது எங்கள் தமிழர்கள் மரபில் ஒன்று என சொல்கின்றீர்களே, குழந்தைப் பருவத்திலேயே விதவைகளாகும் இந்தப் பெண்களின் உணர்வுகளுக்கு என்ன பதில் சொல்வீர்கள் என்றெல்லாம் அதில் கேட்டார். மேலும் அதில் தன் குடும்பத்தில் நடந்த நிகழ்வையும் குறிப்பிட்டுள்ளார் பெரியார். “நான் கன்னட பலிஜா நாயுடு ஜாதியைச் சார்ந்தவன். என் குடும்பத்தில் மறுமணம் செய்யும் வழக்கம் இல்லை. ஆனால் 9 வயதுள்ள என்னுடைய தங்கை மகளுக்கு 12 வயதுள்ள மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் ஆன 2 மாதத்தில் மாப்பிள்ளை இறந்துவிட்டான். நான் வெளியூரிலிருந்து வந்தவுடன் எனக்கு திருமணம் வேண்டுமென்று நான் எப்போதாவது கேட்டேனா என்று என் காலை பிடித்துக் கொண்டு என் தங்கை மகள் அழுதாள்.

மறுமணம் செய்யும் பழக்கம் இல்லாத எங்கள் வீட்டில் என் தங்கை மகளைக் காலிலிருந்து தூக்கும் போதே மறுமணம் செய்து வைப்பேன் என்ற எண்ணத்தோடுதான் தூக்கினேன். அதன்பிறகு சிதம்பரத்தில் வைத்து என் தங்கை மகளுக்கு மறுமணமும் செய்து வைத்தேன். அங்கிருந்து வந்தபிறகு என்னை ஜாதியிலிருந்து தள்ளி வைத்து விட்டனர். ஆனால் நான் நகராட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் 4 கொப்பரை சர்பத் கலக்கி வைத்தும்கூட போதவில்லை. அப்போது ஜாதிக்காரன் எல்லாம் வந்துவிட்டான்” என்று எழுதியுள்ளார். இதை முழுவதும் படிக்காமல் தன்னுடைய ஜாதிப் பெயரை சொன்னதை மட்டும் வைத்துக்கொண்டு பெரியார் தன்னுடைய ஜாதிப் பெயரை பெருமையாகச் சொன்னார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவரே அதை சொல்ல வில்லை என்றாலோ அல்லது மாற்றி தமிழ் நாயக்கர் என்று சொல்லி இருந்தாலோ, அப்படியொரு ஜாதி இருக்கிறது என்று இவர்கள் நம்பியும் இருப்பார்கள்.



“மார்சல் நேசமணி
தன் வாழ்க்கை முழுவதும்,
தன் கையால்
மாலை அணிவித்த
ஒரே தலைவர்
பெரியார் மட்டும்தான்”
என்று அவர்
குறிப்பிட்டுள்ளார்.

மொழிவழி மாநிலங்கள் பிரிவினைக்கு ம.பொ.சி.தான் போராடினார் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது முதலில் பொய்யானது. நம்முடைய வரலாறுகள் சரியாக பதிவு செய்யப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சித்தூர் மாவட்ட குழு இதற்காகத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டது. இவர்கள் கடையடைப்பு, ரயில் மறியல் போராட்டங்கள் செய்ததெல்லாம் பதிவு செய்யப்படவில்லை.

அதேபோல சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதம் இருந்துதான் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்தார்கள் என்றும் சொல்கிறார்கள். 1954ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி, தனது பிறந்தநாளில் மொழிவழி மாநிலங்கள் பிரிவினையைப் பற்றி பெரியார் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதன்பிறகு 11.10.1955-இல் மீண்டும் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.”அதுதான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டை விட்டு மலையாளிகள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடர்கள் பிரிந்தபோன பின்பும் கூட தமிழகத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் கூட இருக்கக்கூடாது என்றும் பார்ப்பானும், வட நாட்டானும் சூழ்ச்சி செய்து இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்து சென்னை நாடு என்று பெயர் கொடுக்க இருப்பதாகத் தெரிய வருகிறது.

தமிழ், தமிழ்நாடு என்ற பெயர் இந்த நாட்டுக்கு இல்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்று விட்டார்கள் என்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால் பிறகு என்னுடைய வாழ்வோ, என்னை பின்பற்றும் கழகத்தினருடைய வாழ்வோ எதற்காக இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை” என்று எழுதினார். இதற்குப் பிறகு ஒரு வருடம் கழித்து 1956ஆம் ஆண்டில்தான் சங்கரலிங்கம் உண்ணாவிரதம் இருந்தார்.

சங்கரலிங்கம் என்ன கருத்தை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்தார் என்பதையும் பார்க்க வேண்டும். அவர் மொழிவழி மாநிலம் அமைத்தல் வேண்டும் என்று முதல் கோரிக்கையாக வைத்தார். மொழிவழி மாநிலம் அமைந்து கன்னடன், மலையாளி, தெலுங்கன் தனித்தனியாக சென்றுவிட்டார்கள் என்று 1955ஆம் ஆண்டிலேயே பெரியார் எழுதுகிறார். அடுத்து, சென்னை ராஜ்யம் என்பதை மாற்றி தமிழ்நாடு எனப் பெயர் வைத்தல் வேண்டும் என்கிறார் சங்கரலிங்கம். அதுமட்டுமல்ல, ரயிலில் ஒரே வகுப்பில் அனைவரும் பயணம் செய்தல் வேண்டும், வெளிநாட்டு விருந்தினர்களுக்கு நடனம் முதலான ஆடம்பரங்களை விலக்கி சைவ உணவு மட்டுமே அளிக்க வேண்டும், அரசுப் பணியில் உள்ளவர்கள் அனைவரும் கதர் அணிதல் வேண்டும், ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சாதாரண மனிதர்களைப் போல அரசியல்வாதிகளும் வாழ வேண்டும், தேர்தல் முறையில் மாறுதல் செய்ய வேண்டும் (என்ன மாறுதல் என்று சொல்லவில்லை), தொழிற்கல்வி அளிக்கப்பட வேண்டும், இந்தியா முழுவதும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும், விவசாயிகளுக்கு விளைச்சலில் 60 விழுக்காடு வாரமளித்தல் வேண்டும், மத்திய அரசு இந்தியை மட்டும் பயன்படுத்தக்கூடாது, பொது இடங்களில் ஆபாசமாக நடந்துகொள்வதைத் தடுக்க வேண்டும் என 12 கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்.

இவரைக் குறைத்து சொல்ல வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. ஆனால் பெரியார் முன்பே சொன்னவற்றை மறைக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் பேசும்போது, நம்முடைய வரலாறுகளைப் பதிவு செய்ய நாம் தவறுகிறோம் என்பதற்காக இதைச் சொல்கிறேன். 11.10.1955 அன்று பெரியார் வெளியிட்ட அந்த அறிக்கையைத் தொடர்ந்து, 25ஆம் தேதியில் மீண்டும் ஒரு அறிக்கையைப் பெரியார் வெளியிட்டார். “பொதுவாக ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலையில்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் சீக்கிரம் பிரிந்தால் நல்லது என்கிறது எண்ணம் எனக்குத் தோன்றிவிட்டது. கன்னடியர்களுக்கும், மலையாளிகளுக்கும் இனப்பற்றோ, சுயமரியாதையோ இல்லை (பெரியாரை கன்னடர் என்று சொல்கிறார்கள், ஆனால் பெரியார் கன்னடர்களையும் சேர்த்தே சுயமரியாதை இல்லாதவர்கள் என்று எழுதியுள்ளார்). மத்திய ஆட்சிக்கு அடிமையாய் இருப்பதைப் பற்றி அவர்களுக்கு சிறிதும் கவலை இல்லை.

மேலும் சென்னை மாகாணத்தில் 7இல் ஒரு பாகஸ்தர்களாகவும், 14இல் இரண்டு பாகஸ்தர்களாகவும் இருந்துகொண்டு தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் ஆகியவற்றில் 3இல் 2 பாகத்தை அடைந்துகொண்டு, இவர்கள் நம்மோடு கலந்திருப்பதால் நம் நாட்டை தமிழ்நாடு என்றுகூட சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆட்கொண்டு இருந்தார்கள். இவர்கள் சீக்கிரம் பிரியட்டும் என்றே கருதி வந்தேன். அந்தப்படியே பிரிய நேர்ந்துவிட்டது. அதனால் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்” என்று எழுதினார் பெரியார்.

எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் பங்கு எதுவுமே இல்லை, நேசமணிதான் போராடினார் என்று பெரியார் மீது ஒரு குற்றச்சாட்டு வைக்கிறார்கள்.1998ஆம் ஆண்டில் நடந்த 42ஆவது குமரி மாவட்ட விடுதலை விழாவில் நேசமணியின் வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளிவந்தது. சட்டமன்ற உறுப்பினராக இருந்த அப்துல் ரசாக் என்பவர் அந்த நூலை எழுதினார். அதில் குமரி எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் பங்கு என்னவென்பதையும் அவர் எழுதியிருக்கிறார். அதற்கு முன்னுரையை சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஏ.சாமிதாசு எழுதியிருந்தார். அதில்”கண்ணில் கண்டவர்களைக் கண்டால் அறியாம் பள்ளி என்றுகூறி கைதுசெய்தனர். நான் போலிசுக்கு பிடிகொடுக்காமல் வாழ்ந்தேன். திருவிதாங்கூரில் நடந்த தமிழகப் போராட்டத்தில் போலிசு அத்துமீறி செயல்பட்டது. பலரைத் துப்பாக்கிக்கு இரையாக்கி, பலரை சித்திரவதை செய்தும், பலரை துன்புறுத்தியும் கைது செய்தனர். தமிழ் கூட்டங்களில் சொற்பொழிவாற்ற வந்த ம.பொ.சி. சொற்பொழிவு ஆற்றாமலேயே அரசுக்கு பயந்து ஓடிவிட்டார்” என்று எழுதியிருந்தார்.

ஆனால் இந்த ம.பொ.சி.யைத்தான் எல்லைப் போராட்டத்துக்கு போராடினார் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரியை தமிழ்நாட்டோடு இணைக்க வேண்டுமென்று போராடிய போராட்டத்தில் நேசமணியோடு இணைந்து போராடிய ஒருவர் இந்த சாமிதாசு. “ஆனால் பெரியார் ஈ.வே.ரா மட்டும் திருவிதாங்கூர் நிலைமையை மார்சல் நேசமணியை சந்தித்தும், மக்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார். இதன் பின்னணியாக சென்னை மெரீனா கடற்கரையில் ஒரு கூட்டத்தைப் போட்டு திருவிதாங்கூரில் போலிசு அடக்குமுறையை உடனடியாக நிறுத்தாவிட்டால் தமிழகத்தில் வாழும் மலையாளிகளை இங்கிருந்து அடித்துத் துரத்துவோம் என்று பொதுக்கூட்டத்தில் அறிக்கை விட்டார். மலையாள அரசு தமிழர்களை துன்புறுத்தியதை நிறுத்திக்கொண்டது” என்றும் அவர் எழுதியுள்ளார்.

“மார்சல் நேசமணி தன் வாழ்க்கை முழுவதும், தன் கையால் மாலை அணிவித்த ஒரே தலைவர் பெரியார் மட்டும்தான்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதோ ஏதோ பெரியாரிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக எழுதப்பட்டதல்ல. தெற்கு எல்லைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கி நடத்திய நேசமணி தன் கையால் பெரியாருக்கு மட்டும்தான் மாலையிட்டார், வேறு யாருக்கு அவர் மாலையிட்டதே இல்லை என்பதை பெரியார் இறந்து 25 வருடங்களுக்குப் பிறகு 1998ஆம் ஆண்டில் இவர் எழுதியிருக்கிறார். ஆனால் பயந்து ஓடிய ம.பொ.சி.யைத்தான் இன்றைக்கு சில தமிழ் தேசியவாதிகள் தூக்கிப்பிடிக்கின்றனர்.

- தொடரும்

ர.பிரகாசு

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# டிசம்பர் 24இல் திருச்சி நோக்கி திரளுவீர்!

## அனைத்து இயக்கங்களும் இணைந்து நடத்தும் கருஞ்சட்டைப் பேரணி

பெரியார் நினைவு நாளான டிசம்பர் 24 அன்று அனைத்து பெரியாரிய இயக்கங்களும், உணர்வாளர்களும் இணைந்து முக்கியமான அரசியல் நிகழ்வு ஒன்றினை நடத்த வேண்டும் என்பது குறித்து 10-11-2018, சனிக்கிழமை அன்று சென்னை செய்தியாளர்கள் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

- டிசம்பர் 24 அன்று மாலையில் திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி மற்றும் மாநாடு நடத்துவதென்று ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.
- மாநாட்டிற்கான பெயர் விவாதிக்கப்பட்டு "தமிழின உரிமை மீட்போம்!" என்ற முழக்கத்தின் பெயரில் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.
- இயக்கங்கள் மற்றும் இயக்கங்களை தாண்டிய பெரியாரிய சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், உணர்வாளர்கள் அனைவரையும் பங்கேற்கச் செய்வது.
- திருச்சியில் அனுமதி பெறுவதற்கான பொறுப்பினை தோழர் குடந்தை அரசன் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.
- ஒன்பது மண்டலங்களாக பிரித்து மாநாட்டிற்கான வேலைகளை பார்ப்பது என முடிவெடுக்கப்பட்டு, ஒவ்வொரு இயக்கத்திற்கும் பொறுப்பு கொடுக்கப் பட்டது.

**ஒன்பது மண்டலங்கள்**

1. சென்னை - பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி: - 8608068002), பிரவீன் (மே 17 இயக்கம்- 9884072010 )
2. மதுரை - தளபதி, மே பதினேழு இயக்கத் தோழர்கள் (8526837763), திவிக.
3. திருச்சி - நிலவழகன் (தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் - 9942546468), தோழர்கள் செங்கை குயிலி மற்றும் எழில் புத்தன் (ஆதித்தமிழர் பேரவை- 7598157814 - 8610993151)
4. கோவை - டைசன் (தமிழர் விடியல் கட்சி- 9840120233)
5. நெல்லை - நாகை திருவள்ளுவன் (தமிழ்ப்புலிகள் கட்சி- 9952626353)
6. சேலம் - திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள்
7. வேலூர் - செவ்வேள் (த.ஒ.வி.இ)
8. கடலூர், புதுச்சேரி - வீர மோகன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்)
9. தஞ்சை - அரங்க. குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்-9047521117)

அனைத்து மண்டலங்களிலும் உள்ள அனைத்து ஆதரவு இயக்கங்களின் பொறுப்பாளர்களையும் அழைத்து மாநாட்டிற்கான மண்டலக் கூட்டத்தினை நவம்பர் 20ஆம் தேதிக்குள் நடத்திட வேண்டும் என்பது முடிவானது.

**முதல்கட்ட பிரச்சாரங்கள்:**

- துண்டறிக்கை - முதல் கட்டமாக 50,000 முன்னோட்டத் துண்டறிக்கைகள் அச்சிடுவது.
- சுவரெழுத்து - ஒவ்வொரு மாவட்டத்திலும் வாய்ப்பிருக்கும் அனைத்து இடங்களிலும் எழுதப்பட வேண்டும்.
- 'Single Bit சுவரொட்டி'- டிசம்பர் 6ம் தேதிக்குப் பின்னர் ஒட்டப்பட வேண்டும்.




**நிதிப் பொறுப்பேற்பு:**

முதல் கட்ட நிதியாக அமைப்புகள் பொறுப்பேற்றுக் கொண்ட தொகை.

தமிழ்ப்புலிகள் கட்சி - 10,000; விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சி - 10,000; திராவிடர் விடுதலைக் கழகம் - 10,000; தந்தை பெரியார் திராவிடர் கழகம் - 10,000; தமிழர் விடியல் கட்சி - 10,000; மே பதினேழு இயக்கம் - 10,000; தாளாண்மை உழவர் இயக்கம் - 10,000; பெரியார் சிந்தனையாளர் பேரவை - 5,000; தமிழ்நாடு திராவிடர் கழகம் - 5,000; ஆதித் தமிழர் பேரவை - 5,000; டிசம்பர் 3 இயக்கம் - 5,000; மொத்த தொகை - 90,000.00 - முதற்கட்ட நன்கொடை.

நவம்பர் 28 புதன் அன்று திருச்சியில் அடுத்த கட்ட விரிவான ஆலோசனைக் கூட்டம் நடத்துவது என்பது முடிவெடுக்கப்பட்டது. அமைப்புகள் தாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட முதல்கட்ட தொகையினை நவம்பர் 28 அன்று கையளிப்பது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டில் அமைப்புகள் தங்கள் கொடிகளோ, அடையாளங்களோ இல்லாமல் பங்கேற்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

முழக்கப் பதாகைகள் பொதுப்பெயரில் இருத்தல் வேண்டும் என்றும், கருப்பு சட்டை அணிந்து பங்கேற்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மாநாட்டினை "பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பு" என்ற பெயரில் நடத்துவதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

**ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற பொறுப்பாளர்கள்:**

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை ராமகிருஷ்ணன், புதுச்சேரி திவிக தலைவர் லோகு அய்யப்பன், தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவன், தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் தலைவர் அரங்க குணசேகரன், ஆதித் தமிழர் பேரவையின் மாநில மகளிரணி செயலாளர் செங்கை குயிலி மற்றும் பொறியியலாளர் அணி செயலாளர் எழில் புத்தன், விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் தோழர் வாலாசா வல்லவன், தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் டைசன், அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கத்தின் தோழர் தெய்வமணி, டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் முனைவர் தீபக் மற்றும் சரவணன், பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தீனா, தாளாண்மை உழவர் இயக்கத்தின் ஒருங் கிணைப்பாளர் கோ.திருநாவுக்கரசு, தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் ஒருங் கிணைப்பாளர் கா.சு நாகராசன், தமிழர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப் பாளர் சுந்தரமூர்த்தி, தமிழக மக்கள் முன்னணி செல்வமணி, இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில், திவிக தலைமை நிலைய செயலாளர் தபசிகுமரன், தபெதிக சென்னை மாவட்ட தலைவர் குமரன், மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் திருமுருகன் காந்தி மற்றும் பிரவீன்குமார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்திய உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அனைத்துப் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தமிழக மக்களே!

சாதி ஆணவத்தின் காரணமாக காதலர்களை மணம்புரிய விடாமல் தடுப்பது, மணமானப் பின்பும் பிரிப்பது, பிரிக்க இயலாவிட்டால் கொல்வது என நீளும் உரிமை மீறல்களைச் சட்டம் மட்டுமே தடுத்துவிட முடியாது. பழைய கருத்துகளின் பிடியில் சிக்குண்டுள்ளோரை மீட்டெடுக்க புதிய சக வாழ்வை நாடும் சமூக சக்திகள் அனைவரும் முனைய வேண்டும். அனைத்துக் கட்சிகள், இயக்கங்கள், பள்ளி, கல்லூரி பல்கலைக்கழக ஆசிரியர்கள், சினிமா, விளையாட்டுத் துறையினர், தொழிற் சங்கங்கள், அரசுத்துறையினர், எழுத்தாளர்கள் உள்ளிட்ட படைப் பாளிகள், இலக்கிய ஆளுமைகள், மாணவர்கள், பெண்ணுரிமை இயக்கங்கள், ஊடகங்கள் என துறைதோறும் உள்ள சனநாயக சக்திகள் சமுதாய வளர்ச்சிக்கு தடையாய் உள்ள சாதி ஆணவத்திற்கு எதிராய்ப் பேச வேண்டும், போராட வேண்டும், இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும் என உரிமையோடு கேட்டுக் கொள்கிறோம்.

திராவிடர் விடுதலைக் கழக சார்பில் தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், தென்சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், வடசென்னை மாவட்ட தலைவர் ஏசுகுமார், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமார் மற்றும் திருவல்லிக்கேணி, மயிலைப் பகுதித் தோழர்களும், வடசென்னை மாவட்ட பெண் தோழர்கள் ராஜி மற்றும் சங்கீதா மற்றும் தோழர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

எட்டு இயக்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றன. பங்கேற்ற அமைப்புகளும் அதன் பொறுப்பாளர்களும்:

பாலன் (செயலாளர், தமிழ்த் தேச மக்கள் முன்னணி), செந்தில் (ஒருங்கிணைப் பாளர், இளந்தமிழகம்), அ.சா. உமர் பாரூக் (மாநிலப் பொதுச் செயலாளர், எஸ்.டி.பி.ஐ.), வே.பாரதி (பொதுச் செயலாளர் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), அப்துல் ரசாக் (மாநில தலைமை நிலையச் செயலாளர், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா), சுந்தரமூர்த்தி (தலைவர், தமிழர் விடுதலைக் கழகம்), விவேகானந்தன் (மே பதினேழு இயக்கம்), சைலேந்தர் (செய்தி தொடர்பாளர், தமிழர் விடியல் கட்சி).

**நன்கொடை**

விருதுநகர் கழகச் செயற்பாட்டாளர் கு. கணேசமூர்த்தி-திருச்சி தே. சுதாதேவி ஆகியோரின் ஜாதி-தாலி-சடங்கு மறுப்பு வாழ்க்கை இணையேற்பு நிகழ்வு ஜன. 21, 2018 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் திருச்சியில் நடந்தது. மணவிழா மகிழ்வாக கழக வளர்ச்சிக்கு ரூ.3000/- நன்கொடை வழங்கினர்.

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டம் தொழுவந்தங்கல் கிராமத்தில் வீ. முருகன்-நா.பஞ்சவர்ணம் ஆகியோரது வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வை 11.11.2018 ஞாயிறு அன்று மாவட்ட செயலாளர் இராமர் நடத்தி வைத்தார். கழகத் தோழர்கள் மண விழாவில் பங்கேற்றனர். மணவிழா மகிழ்வாக கழக வளர்ச்சிக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கப்பட்டது.

(நன்கொடையினை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். - ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd November 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN